அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 15 - கிறிஸ்தவம்

### புள்ளியிடும் திட்டம்



Department of Examinations - Sri Lanka

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/

**கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2020**

**15 - கிறிஸ்தவம்**

I **வினாப்பத்திரம்**

பல்தேர்வு வினாக்கள்

| | | | |
|---|---|---|---|
| 01 - 40 | = 01 x 40 | 40 | = 40 புள்ளிகள் |

II **வினாப்பத்திரம்**

1ம் வினா (கட்டாயமானது)

| | | | |
|---|---|---|---|
| 01 – 10 | = 02 x 10 | 20 | = 20 புள்ளிகள் |

**2 வினா (2 - 7 வரை தெரிவு செய்த வினாக்கள் 04)**

| | | |
|---|---|---|
| I. பகுதி புள்ளிகள் | 02 | |
| II. பகுதி புள்ளிகள் | 03 | |
| III. பகுதி புள்ளிகள் | 05 | 10 |

**3 வினா**

| | | |
|---|---|---|
| I. பகுதி புள்ளிகள் | 02 | |
| II. பகுதி புள்ளிகள் | 03 | |
| III. பகுதி புள்ளிகள் | 05 | 10 |

**4 வினா**

| | | |
|---|---|---|
| I. பகுதி புள்ளிகள் | 02 | |
| II. பகுதி புள்ளிகள் | 03 | |
| III. பகுதி புள்ளிகள் | 05 | 10 |

**5 வினா**

| | | |
|---|---|---|
| I. பகுதி புள்ளிகள் | 02 | |
| II. பகுதி புள்ளிகள் | 03 | |
| III. பகுதி புள்ளிகள் | 05 | 10 |

**6 வினா**

| | | |
|---|---|---|
| I. பகுதி புள்ளிகள் | 02 | |
| II. பகுதி புள்ளிகள் | 03 | |
| III. பகுதி புள்ளிகள் | 05 | 10 |

**7 வினா சிறு குறிப்பு இரண்டிற்கு**

05 + 05 10

**மொத்தம்** 04 x 10 = 40 **புள்ளிகள்**

**100**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதறபக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................................... ✓ $\frac{4}{5}$ (△)
.....................................................................................
.....................................................................................

(ii) ..................................................................................... ✓ $\frac{3}{5}$ (△)
.....................................................................................
.....................................................................................

(iii) ..................................................................................... ✓ $\frac{3}{5}$ (△)
.....................................................................................
.....................................................................................

**மொத்தம்** ⟶ $\frac{10}{15}$ (☐)

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

V. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**15 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

ක්‍රිස්තියානි ධර්මය I, II
கிறிஸ்தவம் I, II
Christianity I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கிறிஸ்தவம் I

**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** இயேசுவானவர் பொதுத் திருப்பணியை ஆரம்பித்த இடம்
(1) சமாரியா (2) எருசலேம் (3) கலிலேயா (4) எகிப்து

**2.** 'கடவுள் நம்முடன் இருக்கிறார்' என்பதற்கான எபிரேய சொல்
(1) இம்மானுவேல் (2) மரநாத்தா (3) ரபோனி (4) கிறிஸ்டோஸ்

**3.** திருமுழுக்கு யோவானின் பணியில் இயேசுவானவருடன் தொடர்புடைய முக்கிய விடயம்
(1) பாதங்களைக் கழுவுதல் (2) வழியை ஆயத்தப்படுத்துதல்
(3) சீடத்துவம் (4) எச்சரிக்கை விடுத்தல்

**4.** சமுதாய சமத்துவத்தை மதித்த திருமுழுக்கு யோவான் பொது மக்களுக்கு வழங்கிய அறிவுரை யாது?
(1) உங்கள் ஊதியமே போதுமென்றிருங்கள்.
(2) இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
(3) குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக வரி அறவிடாதீர்கள்.
(4) எவரையும் அச்சுறுத்தி எதனையும் பறிக்காதீர்கள்.

**5.** இறைவாக்கு உண்மையானதாய் அமைந்தது, திருமுழுக்கு யோவானின் விசேட
(1) திருப்பணியின் மூலமாகும். (2) குடும்ப உறவின் மூலமாகும்.
(3) சீடத்துவத்தின் மூலமாகும். (4) மேலாடையின் மூலமாகும்.

**6.** 'இயேசுவானவரின் பிறப்பு பல நூற்றாண்டுகள் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் நிறைவாகும்.' இறைமகனின் பிறப்பின் மூலம் நிறைவு பெற்றது இறைமகனின்,
(1) மனுவுரு ஏற்றலாகும். (2) மீள் வருகையாகும்.
(3) விண்ணேற்றமாகும். (4) சிலுவை மரணமாகும்.

**7.** 'இயேசு' என்ற பெயர்,
(1) ஆரம்பகால திருச்சபையால் கொடுக்கப்பட்டது.
(2) சீடர்களால் இயேசுவானவரின் பணியை அடையாளப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது.
(3) அவரின் மெசிய பணியுடன் ஒத்ததாகும்.
(4) இயேசுவின் உயிர்த்தெழுதலின் பின்னர் கொடுக்கப்பட்டது.


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**8.** பின்வரும் வெளிப்பாடுகளைக் கருதுக.

A - இறை கட்டளைக்கு கீழ்ப்படிதல்
B - இறை கட்டளையைக் கேட்டு அமைதியாய் இருத்தல்
C - மரியாவை தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்லல்
D - மரியாவுடன் எருசலேமில் தரித்திருத்தல்

மேற்குறித்தவற்றுள் வானதூதரின் செய்திக்கு யோசேப்பு காட்டிய சரியான வெளிப்பாடுகளாக அமைவன

(1) A யும் B யும் மாத்திரம்
(2) A யும் C யும் மாத்திரம்
(3) A யும் D யும் மாத்திரம்
(4) B யும் D யும் மாத்திரம்

**9.** இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலம், இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவு,

(1) முறிவுற்றது.
(2) இரகசியமாகியது.
(3) சந்தேகத்திற்குட்பட்டது.
(4) மீள புதுப்பிக்கப்பட்டது.

**10.** சிறப்புப் பிறப்புகள் மற்றும் வாழ்வுகள் பற்றிய கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- குழந்தையைத் துணிகளில் சுற்றி, தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள்.
- யோவான் ஒட்டக முடியாலான ஆடையை அணிந்து இடையில் தோல் கச்சையைக் கட்டியிருந்தார்.
- யோசேப்பிற்கும் மரியாவிற்கும் விடுதியில் இடம் கிடைக்கவில்லை.
- வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் யோவானின் உணவாக இருந்தது.

இவற்றில் கருதப்படுவது,

(1) வறுமை அவசியமானதல்ல.
(2) அவர்கள் பலவந்தமாக வறுமைக்குள் தள்ளப்பட்டனர்.
(3) அவர்கள் வறுமையை நிராகரித்தனர்.
(4) அவர்கள் வறுமையை சுயமாக ஏற்றுக்கொண்டனர்.

**11.** இயேசுவின் தாய், சகோதரன், சகோதரி ஆவதற்கு, நாம் செய்ய வேண்டியது,

(1) தினமும் ஆலயம் செல்லுதலாகும்.
(2) மரபுகளைப் பாதுகாத்தலாகும்.
(3) சமுதாயப் பணியில் மட்டும் ஈடுபடுதலாகும்.
(4) இறைவனின் சித்தம் அறிந்து அதற்கமைய செயற்படுதலாகும்.

**12.** "நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்" என்ற இயேசுவானவரின் கூற்றின் மூலம் கிறிஸ்தவர்களாகிய எமக்கு வழங்கப்படும் செய்தி யாது?

(1) இயேசுவுடனான நமது தனிப்பட்ட உறவு முக்கியமானது என்பதாகும்.
(2) இயேசுவைப் பற்றி நல்ல அறிவு வேண்டும் என்பதாகும்.
(3) பிரசித்தமாயிருத்தல் முக்கியமானது என்பதாகும்.
(4) பிறரோடு எம்மை ஒப்பிடுதல் முக்கியமானது என்பதாகும்.

**13.** நாசரேத்து தொழுகைக் கூடத்தில், இயேசுவானவர், சாரிபாத்தின் விதவை, நாமான் பற்றிய உதாரணங்களினூடாக முன்வைத்த செய்தி

(1) விதவையின் விசுவாசம் விசேடமானது என்பதாகும்.
(2) இறையரசு பிற இனத்தவருக்கும் திறந்திருக்கின்றது என்பதாகும்.
(3) நாமான் எலியாவிடம் வந்து குணமாகினார் என்பதாகும்.
(4) யூதேயாவில் பிற இனத்தவரும் இருக்கிறார்கள் என்பதாகும்.

**14.** வாய்மொழிப் பாரம்பரியத்தைப் பின்பற்றிய குழுவினர்

(1) சதுசேயர்
(2) எசீனியர்
(3) பரிசேயர்
(4) செலோத்தியர்

**15.** 'இயேசுவின் சீடர்கள் பல்வேறு பின்னணிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களாவர்.' இதனூடாக நமக்கு முன்வைக்கப்படும் முக்கிய முன்மாதிரி யாது?

(1) நற்செய்தியைக் கூறுவதற்கு பின்னணி முக்கியமாகும்.
(2) யூதாவின் பல்வேறு பின்னணிகளை ஏற்றுக்கொள்ளலாகும்.
(3) இலங்கை மக்களின் பின்னணிகளைத் தேடியறிவதன் முக்கியத்துவமாகும்.
(4) இறை வார்த்தையைப் பரப்புவதற்குத் தராதரம் முக்கியமற்றது என்பதாகும்.

**16.** இயேசு புலம்பி கவலை கொண்டது,

(1) எருசலேம் மக்கள் பற்றியாகும்.
(2) எருசலேம் ஆலயம் பற்றியாகும்.
(3) எருசலேம் ஏழைகள் பற்றியாகும்.
(4) எருசலேம் நகரம் பற்றியாகும்.


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

**17.** இயேசுவின் போதனைகளின் மையப்பொருளாய் அமைந்தது என்ன?
(1) இறையரசு (2) அரசியல் சுதந்திரம்
(3) யூத சட்டம் (4) எருசலேம் ஆலயத்தை மீளமைத்தல்

**18.** 'மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை' என்பதனூடாக இயேசுவானவர் முன்வைத்த செய்தி,
(1) உணவைப் போன்று ஆடை அணிகலன்களும் தேவை என்பதாகும்.
(2) கடவுள் உணவைத் தருவார் என்பதாகும்.
(3) இறைவார்த்தையினாலும் நாம் நிறைவு பெற்றிருப்பது முக்கியமாகும்.
(4) கல், அப்பமாக மாற்றப்படலாம்.

**19.** இறைபணியில் ஈடுபட்ட 70 பேர் மீண்டும் வந்தபோது இயேசுவானவர் எதற்கு மதிப்பளித்தார்?
(1) அவர்களின் எளிய வாழ்க்கை முறை
(2) இருவர் வீதம் பணியில் ஈடுபட்டமை
(3) நோயாளர்களைக் குணப்படுத்துதலும் தீய ஆவிகளை விரட்டுதலும்
(4) அவர்களின் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருந்தமை

**20.** சிலுவை மீது மனந்திரும்பிய கள்வன் தொடர்பாக இயேசுவானவரின் பிரதிபலிப்பின் மூலம் நாம் கற்றுக்கொள்வது,
(1) சந்தர்ப்பத்துக்கேற்ப நடந்துகொள்வதில் முனைப்புக் காட்டுதலாகும்.
(2) இறை மன்னிப்பிற்கு எல்லை கிடையாது என்பதை அறிந்து கொள்ளுதலாகும்.
(3) தப்பித்துக் கொள்வதற்கு வேறு ஏதேனுமொரு முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதாகும்.
(4) ஒடுக்கப்பட்டோருடன் நமது தனித்துவத்தை இனங்காணலாகும்.

**21.** இறையரசின் வளர்ச்சி பற்றி இயேசு கூறிய விதைப்பவனின் உவமைக் கதையிலிருந்து வெளிப்படுத்தப்படும் முக்கிய உண்மை
(1) ஆகாயத்துப் பறவைகளிடமிருந்து இடையூறு ஏற்படும் என்பதாகும்.
(2) முறையான விளக்கம் இல்லாவிடில் வளர்ச்சி நின்றுவிடும் என்பதாகும்.
(3) உலகியல் சிற்றின்பங்கள் தடையாக இருக்கும் என்பதாகும்.
(4) இறைவன் தடைகளை மீறி இறையரசைப் பரப்புவார் என்பதாகும்.

**22.** கொரிந்திய சபைக்கு எழுதிய திருமுகத்தில், முக்கியமான அருட்கொடையாக பவுல் எதனைக் குறிப்பிட்டுள்ளார்?
(1) இறைவாக்கு உரைத்தல் (2) தர்மம் செய்தல்
(3) அன்பு (4) அறிவு

**23.** "ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன்" என்னும் இயேசுவின் வார்த்தைகளின் கருத்து
(1) தனியாக இருங்கள் என்பதாகும். (2) குழுவாக இருங்கள் என்பதாகும்.
(3) சவால்களை எதிர்கொள்ளுங்கள் என்பதாகும். (4) பலமாக இருங்கள் என்பதாகும்.

**24.** இயேசுவானவர் தமது இரண்டாம் வருகை எனும் இறுதிக்காலம் பற்றி எமக்குத் தரும் முக்கிய சவால் என்ன?
(1) இறுதிக்காலத்தில் வெற்றியின் நிகழ்வுக்காக எப்போதும் ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.
(2) இறுதிக்காலத்தின் அடையாளங்கள் அனைத்தையும் முறையாக அறிந்திருத்தல் வேண்டும்.
(3) இறுதிக்காலத்தில் பல்வேறு இடர்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.
(4) உலகியல் விடயங்களைத் தவிர்த்து இறுதிக்காலத்தைப் பற்றி மட்டும் சிந்தித்தல் வேண்டும்.

**25.** பின்வருவன பரிசேயரும் திருச்சட்ட அறிஞர்களும் இயேசுவானவருடன் மேற்கொண்ட சில கலந்துரையாடல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சில விடயங்களாகும்.

A - இறையரசு அன்பின் மீது கட்டப்பட்டுள்ளது.
B - சடங்குகளைவிட இறைவனுடனான உறவு முக்கியமாகும்.
C - ஒருவர் கடவுளுக்கும், செல்வத்திற்கும் பணி செய்யலாம்.
D - இறைவார்த்தையின் ஆன்மீகத் தன்மை முக்கியமற்றது.

மேற்குறித்தவற்றுள் எமது வாழ்விற்கு முக்கியமான விடயங்கள் யாவை?
(1) A யும் B யும் மாத்திரம் (2) A யும் C யும் மாத்திரம்
(3) B யும் C யும் மாத்திரம் (4) C யும் D யும் மாத்திரம்


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

**26.** இயேசுவின் தோற்றம் மாறுதலின்போது அவரின் இரு புறமும் தோன்றிய மோசேயும் எலியாவும் இயேசுவானவரின் வாழ்வு பற்றி எமக்கு கூறிய உண்மை என்ன?
(1) எருசலேமில் இயேசுவின் மரணத்தின் மூலம் இறைவனின் விருப்பம் நிறைவடைதலாகும்.
(2) இயேசுவானவர் எதிர்பார்த்திருந்த மெசியா ஆவார்.
(3) இயேசுவின் தியாக பலியின் மூலம் அனைத்து இறைவாக்கும் நிறைவேறியது.
(4) மெசியாவானவர் தாவீதின் பரம்பரையில் தோன்றும் மீட்பராவார்.

**27.** யூதாசின் செயற்பாடுகளில் இருந்து, நாம் பெற்றுக்கொள்ளும் சவால் என்ன?
(1) இயேசுவானவருக்கு பணி செய்வதன் மூலம் எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல்
(2) நிதிசார்ந்த இலாபத்தை எதிர்பார்த்தல்
(3) உலகத்தவர்களுடன் பக்கம் சார்ந்து இருத்தல்
(4) இயேசுவின் போதனைகள் பற்றி சரியான விளக்கத்தைப் பெற்று, அதன்படிச் செயல்படல்

**28.** கிறிஸ்தவ நம்பிக்கையின் அடித்தளம் அமைக்கப்படுவது,
(1) தம்மைச் சுற்றியாகும். (2) சமுதாயத்தைச் சுற்றியாகும்.
(3) இறை சித்தத்தைச் சுற்றியாகும். (4) உலகத்தைச் சுற்றியாகும்.

**29.** உரோம பேரரசினால் மக்கள் மீது சுமத்தப்பட்ட மிகக்கூடிய சுமை யாது?
(1) அடிமைத்தனம் (2) வரிச்சுமை
(3) பலி செலுத்துதல் (4) சமய வழிபாடு நடத்துதல்

**30.** பின்வருவோரில் இயேசுவின் பாடுகள் தொடர்பாக சாதகமான பிரதிபலிப்புகளைக் காட்டியவர்களின் தொகுதி
(1) சிரேனேயின் சீமோன், பேதுரு, தோமா
(2) இரு கள்வர், யூதாஸ், எருசலேமின் பெண்கள்
(3) பிலாத்து, யூதாஸ், யாக்கோபு
(4) அரிமரத்தியாவின் யோசேப்பு, சிரேனேயின் சீமோன், நூற்றுக்கதிபதி

**31.** ஆபிரகாமின் வாழ்வின் தனிச் சிறப்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - விசுவாசத்தின் மூலம் கடவுளின் அழைப்பிற்குக் கீழ்ப்படிதல்
B - தனது மகனைப் பலியிட ஆயத்தமாதல்
C - கடவுளுடன் கிட்டிய உறவு கொள்ளல்
D - விருத்த சேதனத்தை முக்கிய அடையாளமாகக் கொள்ளல்

மேற்குறித்தவற்றில் கிறிஸ்தவர் ஒருவர் பின்பற்ற வேண்டிய நடத்தைப் பண்புகளாவன
(1) A யும் B யும் மாத்திரம் (2) A யும் C யும் மாத்திரம்
(3) B யும் C யும் மாத்திரம் (4) C யும் D யும் மாத்திரம்

**32.** பவுல், தமஸ்கு நகருக்கு ஏன் செல்ல வேண்டியேற்பட்டது?
(1) கிறிஸ்தவர்களைச் சிறைப்பிடிப்பதற்காகும்.
(2) கிறிஸ்தவர்கள் மீது கல் எறிவதற்காகும்.
(3) தொழுகைக் கூடத்தில் போதிப்பதற்காகும்.
(4) கூடாரம் செய்வதற்காகும்.

**33.** "அவர் பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாக இருக்கிறார்." உயிர்த்தெழுந்த இயேசுவானவர் யாரைப் பற்றி இவ்வாறு கூறினார்?
(1) தோமா (2) பேதுரு (3) பவுல் (4) பர்னபா

**34.** சமுதாயத்தில் காணப்பட்ட அநீதிகளையும் வேறுபாடுகளையும் எதிர்த்துப் பேசுவதற்குத் தலைமை தாங்கவென இறைவனால் அழைக்கப்பட்ட இறைவாக்கினர் யார்?
(1) எசாயா (2) மீக்கா (3) ஒசேயா (4) ஆமோஸ்

**35.** கடவுளின் பரிசுத்த தன்மையையும், மனிதனின் பாவத்தையும் இறைக்காட்சியின் மூலம் அறிந்து கொண்டு சமுதாயத்திற்குள் சென்ற இறைவாக்கினர் யார்?
(1) எரேமியா (2) எசாயா (3) ஒசேயா (4) ஆமோஸ்

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**36.** பன்மைச் சமுதாயத்தில் வாழும் கிறிஸ்தவர்கள், பழக்க வழக்கங்கள், சடங்குகளைப் பின்பற்றும்போது கவனத்திற் கொள்ளவேண்டியது,
(1) பிற சமயச் சடங்குகளில் கலந்து கொள்ளவதனையாகும்.
(2) பிற சமயத்தவரை நமது நம்பிக்கைகளைப் பின்பற்றச் செய்வதனையாகும்.
(3) சடங்குகள் தேவைப்படும்போது அவற்றைப் பின்பற்றச் செய்வதனையாகும்.
(4) கிறிஸ்தவ அடையாளத்திற்கும் விழுமியங்களுக்கும் தடை ஏற்படாத விதத்தில் செயற்படுவதனையாகும்.

**37.** "நான் மக்களின் வாழ்வை நேசிக்கிறேன்; கொலை செய்தலை வெறுக்கின்றேன்" எனக் குறிப்பிட்டவர்
(1) வண. மைக்கல் லெப்ஸ்லி
(2) வண. திஸ்ஸ பாலசூரிய
(3) வண. சந்திரா பர்னாந்து
(4) வண. ஜெராட் டி சில்வா

**38.** பவுலின் மறைத்தூதப் பணியின்போது துணைபுரிந்த அவர்களது வாழ்க்கைப் பின்னணியில் உள்ளடங்கிய கூறுகள் யாவை?
(1) பரிசேயனாயிருந்தமை, உரோம பிரஜை, கூடாரத் தயாரிப்புக் கைத்தொழில்
(2) மெய்யியல் பற்றிய அறிவு, உரோம பிரஜை, தலைமைக் குருக்களின் அனுமதி
(3) பரிசேய சட்டத்தைக் கடைப்பிடித்தமை, தர்சு பட்டணத்தில் பிறந்தமை, ஸ்தோயிக்க மெய்யியலுடன் தொடர்பு கொண்டிருந்தமை
(4) தொழுகைக் கூடங்களில் போதித்தமை, பரிசேயனாயிருந்தமை, தலைமைக் குருக்களின் அனுமதி

**39.** 'இயேசு உயிர்த்தெழுந்தார்' என்ற எதிர்பார்ப்பு எம்மிடமிருந்து அற்றுப் போனால்,
(1) நாம் கிறிஸ்துவை விட்டு விலகிச் செல்வோம்.
(2) எமது அறிவு விருத்தியாகும்.
(3) நாம் பிறரால் ஒதுக்கப்படுவோம்.
(4) நாம் சமுதாயத்தில் பிரபல்யமடைவோம்.

**40.** இறையரசில், இயேசுவானவரால் ஏன் அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன?
(1) தம்மை நோக்கி மக்களை ஒன்றிணைத்துக் கொள்வதற்காகும்.
(2) பின்பற்றுபவர்களையும் அற்புதங்கள் செய்வதற்கு ஊக்குவிப்பதற்காகும்.
(3) நோய்கள் பற்றி அப்போதைய சமுதாய கருத்துக்களை அறிந்து கொள்வதற்காகும்.
(4) மக்கள் மீது இருந்த அன்பும் இரக்கமுமாகும்.

* *

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
**க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020**

| විෂය අංකය / பாட இலக்கம் | 15 | විෂයය / பாடம் | கிறிஸ்தவம் |
|---|---|---|---|

**I පත්‍රය - පිළිතුරු**
**I பத்திரம் - விடைகள்**

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 4 | 21. | 4 | 31. | 2 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 3 | 32. | 1 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 3 | 33. | 3 |
| 04. | 2 | 14. | 3 | 24. | 1 | 34. | 4 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 1 | 35. | 2 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 3 | 36. | 4 |
| 07. | 3 | 17. | 1 | 27. | 4 | 37. | 3 |
| 08. | 2 | 18. | 3 | 28. | 3 | 38. | 1 |
| 09. | 4 | 19. | 4 | 29. | 2 | 39. | 1 |
| 10. | 4 | 20. | 2 | 30. | 4 | 40. | 4 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

| නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை | 25/40 | I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி | 25/40 |
|---|---|---|---|

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**15 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

ක්‍රිස්තියානි ධර්මය I, II
கிறிஸ்தவம் I, II
Christianity I, II

## கிறிஸ்தவம் II

* **முதலாம்** வினாவிற்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

Department of Examinations, Sri Lanka

**1.** (i) (அ) நன்றி கூறும் மனப்பான்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்கென இயேசுவானவர் அடிப்படையாகக் கொண்ட அற்புதம் என்ன?
(ஆ) நன்றி கூறுவதற்கென திரும்பவும் வந்தவர் யார்?

(ii) உலகியல் தனிமனித தேவைகளைப் பற்றிக் கவலைப்படும் வீணான செயலைப் பற்றி எடுத்துக்காட்டுவதற்கு இயேசுவானவர் உபயோகித்த உருவகங்கள் **இரண்டும்** யாவை?

(iii) அப்போதைய யூத சமுதாயத்தில் பெண்களின் நிலையை உயர்த்துவதற்கென இயேசுவானவர் எடுத்த படிமுறைகளைக் காட்டும் **இரண்டு** சந்தர்ப்பங்களைத் தருக.

(iv) (அ) துன்புறும் பணியாள் பற்றிய எதிர்வுகூறலை முன் வைத்த இறைவாக்கினர் யார்?
(ஆ) புதிய ஏற்பாட்டின்படி, இந்தச் செயலை முழுமைப்படுத்தியவர் யார்?

(v) கிறிஸ்தவக் குடும்பப் பிள்ளைகளிடத்து காணப்படவேண்டிய முக்கிய பொறுப்பு ஒன்றையும், பெற்றோர் பிள்ளைகளுக்காக நிறைவேற்ற வேண்டிய கடமை ஒன்றையும் முன்வைக்குக.

(vi) "இந்தத் தண்ணீரைக் குடிக்கும் ஒவ்வொருவருக்கும் தாகம் எடுக்கும். ஆயினும் **நான் கொடுக்கும் தண்ணீரைக்** குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது."
(அ) இயேசுவானவர் இவ்வார்த்தைகளை யாருக்குக் கூறினார்?
(ஆ) தடித்த எழுத்துகளில் தரப்பட்டுள்ள சொற்றொடரின் பொருளைக் குறிப்பிடுக.

(vii) (அ) மெய்யான அமைதி எதன் அடிப்படையில் அமைக்கப்படுகிறது?
(ஆ) 'அமைதி' என்பதற்கான எபிரேயச் சொல் யாது?

(viii) வெவ்வேறு சபைகளாகப் பிரிந்துபோன நிலையிலிருக்கும் கிறிஸ்தவ சபைகளை ஒன்றுபடுத்தும் செயலில் ஈடுபட்டுள்ள, இலங்கையில் காணப்படும் பெண்கள், ஆண்கள் அமைப்புக்கள் ஒவ்வொன்று வீதம் பெயரிடுக.

(ix) பெந்தக்கோஸ்து தினத்தின் பின்னர் பேதுருவின் குணமளிக்கும் பணி நிகழ்வு ஒன்றையும், பிற இனத்தவரிடம் சென்றமை பற்றிய நிகழ்வு ஒன்றையும் முன்வைக்குக.

(x) நீர், வாழ்க்கையில் சவால்களுக்கு முகம்கொடுக்கும் சந்தர்ப்பங்களில் பவுலின் வாழ்க்கையை மாதிரியாகக் கொண்டு கிறிஸ்துவுக்கு சான்று பகரும் விதம் பற்றிய **இரண்டு** உதாரணங்களை எழுதுக.

**2.** (i) இயேசுவானவர் கெத்சமனே தோட்டத்திற்கு எப்போது சென்றார்? எதற்காகச் சென்றார்?

(ii) நித்திரை கொண்ட சீடர்களிடத்து திரும்பவும் வந்த இயேசுவானவர் தொடுத்த வினா என்ன? அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரை என்ன?

(iii) தற்கால சமூகத்தில் நாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு மத்தியில் வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்வதற்கு கெத்சமனே தோட்ட நிகழ்வும் இயேசுவின் செபமும் எவ்வாறு துணைபுரிகின்றன என்பதனை **ஐந்து** விடயங்களினூடாக விளக்குக.


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**3.** (i) 23 ஆம் திருப்பாடல் சங்கீதத்தில் குறிப்பிடப்படும் மேய்ப்பரின் **இரண்டு** நற்பண்புகளை எழுதுக.

(ii) மந்தையானது நல்லாயரான இயேசுவானவருக்கு எவ்வாறு பிரதிநடத்தைகளைக் காட்ட வேண்டும் என்பதனை **மூன்று** காரணிகளினூடாக முன்வைக்குக.

(iii) அன்றைய சமூகத்தில் இயேசுவானவர் நல்லாயருக்குரிய பண்புகளை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் **ஐந்தின்** மூலம், நீர் அப்பண்புகளை எவ்வாறு பின்பற்றுவீர் என விளக்குக.

**4.** (i) இயேசுவானவர் தமது வாழ்விலும் பணியிலும் மன்னிப்பை வெளிப்படுத்திய **இரண்டு** சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக எழுதுக.

(ii) மன்னிப்பு வழங்க மறுத்த பணியாளின் உவமைக்கதை மூலம் பின்வருவனவற்றை விவரிக்குக.

(அ) பணியாளின் வேண்டுதல்

(ஆ) எசமானின் பிரதிநடத்தை

(இ) தமக்குக் கடன்பட்டிருந்த நபரிடத்து பணியாள் காட்டிய பிரதிநடத்தை

(iii) மேற்குறிப்பிடப்பட்ட உவமைக் கதையிலிருந்து மன்னித்தல் பற்றி முன்வைக்கப்படுகின்ற போதனைகள் **ஐந்தினை,** நமது அன்றாட வாழ்க்கையில் சிறப்பாகச் செயற்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதனை விளக்குக.

**5.** (i) பணியாளர் பற்றிய திருவிவிலிய பகுதிகளில் காணப்படும் துன்புறும் பணியாளனின் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள துன்புறும் பணியாளர்கள் **மூவரின்** பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் ஒவ்வொருவரினதும் வாழ்க்கைப் பின்னணி வெளிப்படுத்தும் ஒவ்வொரு விடயம் வீதம் முன்வைக்குக.

(iii) துன்புறுதலுக்கும் கிறிஸ்தவ வாழ்விற்கும் இடையிலான தொடர்புகளை, திருவிவிலியத்திலுள்ள துன்புறும் பணியாளர் கீதங்களில் காணப்படும் **ஐந்து** உண்மைகளின் அடிப்படையில் விளக்குக.

**6.** (i) பவுலின் முதலாம் மறைத்தூதுப் பயணத்தின்போது அவருடன் சென்ற **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) பவுலின் முதலாம் மறைத்தூதுப் பயணத்தின்போது பின்வரும் நகரங்களில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

(அ) சாலமி (ஆ) பாப்போ (இ) லிஸ்திரா

(iii) (அ) மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் பவுலின் செயற்பாடுகளின் மூலம் கிறிஸ்தவப் பணியாளர் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் **ஐந்தை** எழுதுக.

(ஆ) இந்த முன்மாதிரிகளை இன்றைய கிறிஸ்தவ பணியாளர்கள் எவ்வாறு செயற்படுத்தலாம் என விளக்குக.

**7.** பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் **இரண்டைத்** தெரிவுசெய்து, திருவிவிலிய கற்பித்தல்களை அடிப்படையாகக் கொண்டு சிறுகுறிப்பு எழுதுக.

(i) குணப்படுத்துதல்

(ii) இயேசுவின் நாசரேத்து பிரசங்கத்தில் வெளிப்படும் போதனைகள்

(iii) நிக்கதேமுவும் இயேசுவானவரும்

(iv) கூட்டுத் தலைமைத்துவம்

* * *

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

# கிறிஸ்தவம் II

**நோக்கம் :**

கிறிஸ்துவின் போதனைகளை நாளாந்த வாழ்வில் பின்பற்றுவர்.

**1.** (i) (அ) நன்றி கூறும் மனப்பான்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்கென இயேசுவானவர் அடிப்படையாகக் கொண்ட அற்புதம் என்ன?

(ஆ) நன்றி கூறுவதற்கென திரும்பவும் வந்தவர் யார்?

அ. பத்து தொழு நோயாளர் — 01 புள்ளி

ஆ. இயேசுவிடம் வந்து சுகம் பெற்ற சமாரியன் (பிற இனத்தவன்) — 01 புள்ளி

**நோக்கம் :**

கிறிஸ்துவின் போதனைகளை நாளாந்த வாழ்வில் பின்பற்றுவர்.

(ii) உலகியல் தனிமனித தேவைகளைப் பற்றிக் கவலைப்படும் வீணான செயலைப் பற்றி எடுத்துக்காட்டுவதற்கு இயேசுவானவர் உபயோகித்த உருவகங்கள் **இரண்டும்** யாவை?

1. காட்டு மலர்ச் செடிகள்
2. வானத்துப் பறவைகள் (காகம்) — 02 புள்ளிகள்

**நோக்கம் :**

தராதரம் பாராது அனைவரையும் ஏற்றுக் கொள்வர்.

(iii) அப்போதைய யூத சமுதாயத்தில் பெண்களின் நிலையை உயர்த்துவதற்கென இயேசுவானவர் எடுத்த படிமுறைகளைக் காட்டும் **இரண்டு** சந்தர்ப்பங்களைத் தருக.

1. பெண் சீடர்கள் இருந்தார்கள்
2. ஓய்வு நாளில் கூனிப் பெண்ணை சுகப்படுத்தி ஆபிரகாமின் மகள் என வெளிப்படுத்தினார்.
3. இயேசுவின் ஆடையைத் தொட்டு சுகமடைந்த பெண்
4. பரிசேனாகிய சீமோன் வீட்டில் பாவியான பெண்ணின் செயலை ஏற்றுக் கொண்டார்.
5. மார்த்தா, மரியாளின் வீட்டிற்கு சென்றார்.
6. கிணற்றடியில் சமாரியப் பெண்ணை ஏற்றுக்கொண்டார்.
7. ஏழை விதைவையின் காணிக்கையைப் பாராட்டினார்.

(இரண்டு விடையும் எழுதப்பட வேண்டும்.) — 02 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

**நோக்கம் :**

பணியாளனாக துன்புறுதலை பயமின்றி எதிர்நோக்குவர்.

(iv) (அ) துன்புறும் பணியாள் பற்றிய எதிர்வுகூறலை முன் வைத்த இறைவாக்கினர் யார்?

(ஆ) புதிய ஏற்பாட்டின்படி, இந்தச் செயலை முழுமைப்படுத்தியவர் யார்?

அ. ஏசாயா இறைவாக்கினர் — 01 புள்ளி

ஆ. இயேசுவின் மூலமாக முழுமைப்படுத்தப்பட்டது. — 01 புள்ளி


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**நோக்கம் :**

கிறிஸ்துவின் ஆழமான உறவை ஏற்படுத்தி குடும்பம் மற்றும் சமூகத்தைக் கட்டியெழுப்ப ஒத்துழைப்பர்.

(v) கிறிஸ்தவக் குடும்பப் பிள்ளைகளிடத்து காணப்படவேண்டிய முக்கிய பொறுப்பு ஒன்றையும், பெற்றோர் பிள்ளைகளுக்காக நிறைவேற்ற வேண்டிய கடமை ஒன்றையும் முன்வைக்குக.

1. தந்தையையும் தாயையும் மதித்து நடத்தல்.
2. பெற்றோருக்கு கீழ்ப்படிதல்.

1. கடவுளின் கொடையான பிள்ளைகளை அன்பு செய்தல்.
2. அவர்களின் தேவைகளை நிறைவு செய்தல்.
3. பிள்ளைகளின் வாழ்வை நல்வழிப்படுத்தல்.

(பிள்ளையின் பொறுப்பு ஒன்றும் பெற்றோரின் கடமையொன்றும் எழுதப்பட வேண்டும்.)

02 புள்ளிகள்

**நோக்கம் :**

கிறிஸ்துவின் அன்பின் ஒளியினால் தனது வாழ்வைப் பிரகாசிக்கச் செய்வர்.

(vi) "இந்தத் தண்ணீரைக் குடிக்கும் ஒவ்வொருவருக்கும் தாகம் எடுக்கும். ஆயினும் **நான் கொடுக்கும் தண்ணீரைக்** குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது."
(அ) இயேசுவானவர் இவ்வார்த்தைகளை யாருக்குக் கூறினார்?
(ஆ) தடித்த எழுத்துகளில் தரப்பட்டுள்ள சொற்றொடரின் பொருளைக் குறிப்பிடுக.

அ. இயேசு சமாரியப் பெண்ணுக்கு கூறினார்.

ஆ. இயேசு என்னும் ஜீவ தண்ணீர்.
நிலை வாழ்வு
வாழ்வு தரும் தண்ணீர் 02 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

**நோக்கம் :**

நீதி நிறைந்த சமாதான வாழ்வில் ஆர்வம் காட்டுவர்.

(vii) (அ) மெய்யான அமைதி எதன் அடிப்படையில் அமைக்கப்படுகிறது?
(ஆ) 'அமைதி' என்பதற்கான எபிரேயச் சொல் யாது?

அ. நீதி, நேர்மையின் அடிப்படையில் 01 புள்ளி

ஆ. எபிரேயச் சொல் – சாலோம் 01 புள்ளி

**நோக்கம் :**

வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டைக் காண்பர்.

(viii) வெவ்வேறு சபைகளாகப் பிரிந்துபோன நிலையிலிருக்கும் கிறிஸ்தவ சபைகளை ஒன்றுபடுத்தும் செயலில் ஈடுபட்டுள்ள, இலங்கையில் காணப்படும் பெண்கள், ஆண்கள் அமைப்புக்கள் ஒவ்வொன்று வீதம் பெயரிடுக.

1. கிறிஸ்தவ வாலிபர் இயக்கம் ( Y. M. C. A )
2. கிறிஸ்தவ வாலிபப் பெண்கள் இயக்கம் ( Y. W. C. A ) 02 புள்ளிகள்


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**நோக்கம் :**

கிறிஸ்துவுக்காக கனிதரும் பணிக்கு தம்மை ஒப்புவிப்பர்.

(ix) பெந்தக்கோஸ்து தினத்தின் பின்னர் பேதுருவின் குணமளிக்கும் பணி நிகழ்வு ஒன்றையும், பிற இனத்தவரிடம் சென்றமை பற்றிய நிகழ்வு ஒன்றையும் முன்வைக்குக.

1. அழகு வாயிலில் இருந்த பிறவி முடவனை குணப்படுத்தல்.

2. கொர்நெலியு வீட்டிற்குச் சென்று நற்செய்தி கூறியது. 02 புள்ளிகள்

**நோக்கம் :**

துணிவுடன் சத்தியத்திற்கு சான்று பகர்வர்.

(x) நீர், வாழ்க்கையில் சவால்களுக்கு முகம்கொடுக்கும் சந்தர்ப்பங்களில் பவுலின் வாழ்க்கையை மாதிரியாகக் கொண்டு கிறிஸ்துவுக்கு சான்று பகரும் விதம் பற்றிய **இரண்டு** உதாரணங்களை எழுதுக.

1. பவுல் உரோமைக்கு சென்றப் பயணத்தில் கப்பலில் இருந்தோரைத் தைரியப்படுத்தினார். இவ்வாறு துன்பங்கள் பிரச்சினைகள் மத்தியில் இருப்போரைத் தைரியப்படுத்தல்.

2. பவுல் நம்பிக்கையோடு எவருக்கும் அழிவு ஏற்படாது எனக் கூறுகிறார். அவ்வாறே இயேசுவின் வழிகாட்டலோடு பிறமக்களுக்கு இறைவார்த்தையைக் கூறி அவர்களைப் போஷித்தார்.

3. துன்பங்களின் மத்தியில் தைரியத்தோடு சான்று பகர்ந்தார். நாமும் துன்பங்களின் மத்தியிலும் ஆண்டவருக்கு சான்று பகர்தல்.

4. பவுல் மால்த்தா தீவில் பல புதுமைகள் செய்து ஆண்டவருக்கு சான்று பகர்ந்தார். நாமும் ஆண்டவருக்கு சான்று பகர்வோம்.

5. சந்தர்ப்ப சூழலுக்கேற்ற ஞானத்தோடு பவுல் செயல்பட்டதுப் போன்று நாமும் செயற்படுவோம். (இரண்டு விடயம் எழுதப்பட வேண்டும்)

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**நோக்கம் :**

இறை வேண்டுதலில் இறை சித்தத்தை நிறைவேற்றுவர்.

**2.** (i) இயேசுவானவர் கெத்சமனே தோட்டத்திற்கு எப்போது சென்றார்? எதற்காகச் சென்றார்?

(ii) நித்திரை கொண்ட சீடர்களிடத்து திரும்பவும் வந்த இயேசுவானவர் தொடுத்த வினா என்ன? அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரை என்ன?

(iii) தற்கால சமூகத்தில் நாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு மத்தியில் வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்வதற்கு கெத்சமனே தோட்ட நிகழ்வும் இயேசுவின் செபமும் எவ்வாறு துணைபுரிகின்றன என்பதனை **ஐந்து** விடயங்களினுடாக விளக்குக.

i. – இயேசு இறுதி இராப்போசனத்தின் பின்னர் கெத்சமனேத் தோட்டத்திற்குச் சென்றார்.
- ஜெபத்தினூடாக தந்தையின் வழிகாட்டலைப் பெற்றுக்கொள்வதற்கு
- சிலுவைப் பாடுகளுக்கு தன்னை தயார் செய்வதற்கு
- இறை விருப்பத்தை அறிவதற்கு

ii. – வினா – நீங்கள் ஏன் உறங்கிக் கொண்டு இருக்கிறீர்கள்?

அறிவுரை – நீங்கள் சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் மன்றாடுங்கள்.

iii. – இறை விருப்பத்தை நிறைவேற்றுதல்.
- இடைவிடாமல் ஜெபித்தல்
- பாவத்திலிருந்து விடுதலைப் பெறுவதற்காக ஜெபித்தல்
- ஜெபத்தின் மூலமாக எமது தேவைகளை இறைவனிடம் முன்வைத்து ஜெபித்தல்.
- இயேசு என் விருப்பமல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும் என்று கூறியவாறு நாமும் அவரின் விருப்பத்திற்கு இணங்கி ஜெபித்தல்.
- பிறருக்காக ஜெபித்தல்
- துன்பங்களை எதிர்கொள்ள ஜெபித்தல்

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers-> https://bookbeekid.com/resource/past-papers/

**நோக்கம் :**

நல்லாயனின் பண்புகளைக் கடைப்பிடிப்பர்.

**3.** (i) 23 ஆம் திருப்பாடல் சங்கீதத்தில் குறிப்பிடப்படும் மேய்ப்பரின் **இரண்டு** நற்பண்புகளை எழுதுக.

(ii) மந்தையானது நல்லாயரான இயேசுவானவருக்கு எவ்வாறு பிரதிநடத்தைகளைக் காட்ட வேண்டும் என்பதனை **மூன்று** காரணிகளினூடாக முன்வைக்குக.

(iii) அன்றைய சமூகத்தில் இயேசுவானவர் நல்லாயருக்குரிய பண்புகளை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் **ஐந்தின்** மூலம், நீர் அப்பண்புகளை எவ்வாறு பின்பற்றுவீர் என விளக்குக.

i. – குறைவில்லாமல் பாதுகாப்பார்
- நீதிவழி நடத்துவார்.
- வாழ்வில் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நம்மோடு இருப்பார்
- அஞ்சாமை, விடுதலை, கருணை, போஷித்தல்............

ii. – ஆயரின் குரலுக்கு செவி கொடுத்தல்.
- ஆயரின் பின் செல்லத் தீர்மானித்தல்.
- விசுவாசத்துடன் கீழ்ப்படிதல்
- ஆயரின் பின் செல்வதால் ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்ளுதல்.

iii. – இயேசு துன்புறும் மக்களுக்குப் புகழிடம் அளித்தார்.
- இயேசு ஒடுக்கப்பட்டோரை விடுவித்தார்.
- வழிவிலகி சென்றோரை மீட்டுக் கொண்டார்.
- நோயாளர்களைச் சுகப்படுத்தினார்.
- பேதமின்றி அனைவரையும் அன்பு செய்தார்.
- துன்புறும் மக்களுக்கு உதவி செய்தல்.
- சமுதாயத்தில் பலவிதமான ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தல்.
- இயேசுவை விட்டு வழிவிலகியோரை நல்வழிப்படுத்த முயற்சித்தல்.
- நோயாளர்களுக்காக இறைவனிடம் மன்றாடுதல்.
- பல்லின சமூகத்தில் அனைவரையும் ஏற்றுக்கொண்டு ஒற்றுமையாகச் செயற்படுதல்.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**நோக்கம் :**

கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி மன்னிப்பு வழங்குவர்.

**4.** (i) இயேசுவானவர் தமது வாழ்விலும் பணியிலும் மன்னிப்பை வெளிப்படுத்திய **இரண்டு** சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக எழுதுக.

(ii) மன்னிப்பு வழங்க மறுத்த பணியாளின் உவமைக்கதை மூலம் பின்வருவனவற்றை விவரிக்குக.

(அ) பணியாளின் வேண்டுதல்

(ஆ) எசமானின் பிரதிநடத்தை

(இ) தமக்குக் கடன்பட்டிருந்த நபரிடத்து பணியாள் காட்டிய பிரதிநடத்தை

(iii) மேற்குறிப்பிடப்பட்ட உவமைக் கதையிலிருந்து மன்னித்தல் பற்றி முன்வைக்கப்படுகின்ற போதனைகள் **ஐந்தினை,** நமது அன்றாட வாழ்க்கையில் சிறப்பாகச் செயற்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதனை விளக்குக.

i. – இயேசு சிலுவையில் மன்னிப்பளித்தல்.
- இயேசு பாவியானப் பெண்ணை மன்னித்தல்.
- முடக்குவாத நோயாளியின் பாவத்தை மன்னித்தல்.
- கெத்சமனேத் தோட்டத்தில் இயேசுவை கைது செய்ய வந்தபோது காது வெட்டப்பட்டவனை மன்னித்து சுகப்படுத்தினார்.

ii. அ. கடனில் இருந்து விடுவிக்குமாறு வேண்டுதல்.

ஆ. கடனை மன்னித்து விடுவித்தல்.

இ. தன்னிடம் கடன்பட்டவரை மன்னியாமல் தண்டித்தல்.

iii. – மன்னிப்பு வழங்கி செயற்பட வேண்டும்.
- மன்னிப்பு வழங்குவது இறைப்பண்பாகும்.
- மன்னிப்பு கேட்பது தவறு அல்ல
- மன்னிப்பு அனைவருக்கும் அவசியம்
- மன்னிப்பு வழங்குதல், மன்னிப்பு பெறுதல் மூலமாக புதுவாழ்வு உருவாகின்றது.
- மன்னிப்பு வழங்கி, மன்னிப்பு பெறும் செயலானது இறை விருப்பத்தை நிறைவேற்றுகின்றோம்.

($2 + 3 + 5 = 10$ புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**நோக்கம் :**

பணியாளனாக துன்புறுதலை பயமின்றி எதிர்நோக்குவர்.

5. (i) பணியாளர் பற்றிய திருவிவிலிய பகுதிகளில் காணப்படும் துன்புறும் பணியாளனின் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள துன்புறும் பணியாளர்கள் **மூவரின்** பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் ஒவ்வொருவரினதும் வாழ்க்கைப் பின்னணி வெளிப்படுத்தும் ஒவ்வொரு விடயம் வீதம் முன்வைக்குக.

(iii) துன்புறுதலுக்கும் கிறிஸ்தவ வாழ்விற்கும் இடையிலான தொடர்புகளை, திருவிவிலியத்திலுள்ள துன்புறும் பணியாளர் கீதங்களில் காணப்படும் **ஐந்து** உண்மைகளின் அடிப்படையில் விளக்குக.

i.
- ஆண்டவரின் ஆவியைப் பெற்றவர்.
- மென்மைக் குரலுடையவர்.
- நீதியை நிலை நாட்டுபவர்
- அழகிய தோற்றமில்லாதவர்.
- வேதனையுற்ற மனிதர்
- நம் துன்பங்களை சுமந்து கொண்டவர்.............

ii. **யோபு**

அனைத்தையும் இழந்தபோதும் கடவுளிடம் முழுமையான நம்பிக்கைக் கொண்டார்.

**எரேமியா**

இறைவார்த்தையை மக்களுக்கும், அரசர்களுக்கும் பயமின்றி அறிவித்தார்.

படிலோனியா காலத்தில் பேரரசனால் அச்சுறுத்தல் ஏற்பட்ட போது இறை வார்த்தையை அறிவித்தார்.

**இஸ்ரவேல் மக்கள்**

அடிமையாய் இருந்தனர் / துன்புறுத்தப்பட்டனர்.

iii.
- அதிகார ஆளுமைத் தொனியை விட மென்மையாக செயற்படுதல். சாந்தமாக செயற்பட வேண்டும்.
- துன்பங்களை சுமந்து கொண்டார். நாமும் துன்பங்களை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும்.
- துயறுற்றவர்களை மீண்டும் துன்புற விடமாட்டார். துன்புறுவோரை விடுவிக்க நாமும் செயற்பட வேண்டும்.
- அவர் தம் உயிரைப் பலியாகத் தந்தார். நாமும் எம்மை பிறருக்காக அர்பணிக்க வேண்டும்.
- பாவிகளுக்காகப் பரிந்து பேசினார். பாவிகளை நல்வழிப்படுத்த முயற்சிக்க வேண்டும்.
- எமது துன்பங்களை சுமந்து கொண்டார். பிறர் துன்பங்களில் நாமும் பங்குபெற வேண்டும்.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**நோக்கம் :**

கூட்டுத் தலைமைத்துவத்தை நாடுவர்.

**6.** (i) பவுலின் முதலாம் மறைத்தூதுப் பயணத்தின்போது அவருடன் சென்ற **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) பவுலின் முதலாம் மறைத்தூதுப் பயணத்தின்போது பின்வரும் நகரங்களில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

(அ) சாலமி (ஆ) பாப்போ (இ) லிஸ்திரா

(iii) (அ) மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் பவுலின் செயற்பாடுகளின் மூலம் கிறிஸ்தவப் பணியாளர் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் **ஐந்தை** எழுதுக.

(ஆ) இந்த முன்மாதிரிகளை இன்றைய கிறிஸ்தவ பணியாளர்கள் எவ்வாறு செயற்படுத்தலாம் என விளக்குக.

i. – பர்னபா, மாற்கு எனப்பட்ட யோவான்

ii. **சாலமி**

யோவான் மாற்கு இணைத்துக் கொண்ட இடம். தொழுகைக் கூடத்தில் நற்செய்திக் கூறுதல்.

**பாப்போ**

செர்க்கியு பவுல் என்னும் ஆட்சியாளன் கடவுளிடம் நம்பிக்கைக் கொள்ளாதபடி பாரேசு என்னும் பெயருடைய எலிமா என்னும் மந்திரவாதி செயற்பட்டார். எனவே பவுல் அவரை சபிக்க அவர் சில காலம் குருடனாக இருந்தார். ஆட்சியாளர் கடவுளை ஏற்றுக்கொண்டார்.

**லிஸ்திரா**

பிறவியில் ஊனமுற்றவனைக் குணப்படுத்தல் இதன் காரணமாக அங்குள்ள மக்கள் பவுல், பர்னபாவை தெய்வங்களாகக் கருதி அவர்களுக்குப் பலியட முயன்றனர். பவுல் அதனைத் தடுத்து அந்த மகிமையை கடவுளுக்கு செலுத்துமாறுக் கூறினார். நாமும் உங்களைப் போன்ற மனிதர்களே எனக்கூறி நற்செய்தியை அறிவித்தனர். பவுலுக்கு கல்லால் எரிந்தனர்.

iii.
- கூட்டுத்தலைமைத்துவம் – பாடசாலை, சமூகத்தில் ஒன்றிணைந்து செயற்படுதல்.
- கடவுளுக்கு மட்டுமே மரியாதை செலுத்துதல் –
- அனைத்து நன்மைகளுக்காகவும் கடவுளுக்கு நன்றி செலுத்துதல் –
- பிழையான செயல்களுக்கு எதிராகச் செயற்படுதல் –
- துன்பங்கள் மத்தியில் தைரியத்தோடு செயற்படுதல் –
- தாழ்மையாக வாழ்தல் –
- மதிப்பு, மரியாதையை எதிர்பார்க்காமல் துன்பங்கள் மத்தியிலும் நற்செய்திக் கூறுதல் –

(கூட்டுத் தலைமைத்துவத்துக்கு தந்தது போல ஏனைய விடயங்களுக்கும் பொருத்தமானவை எழுதப்பட வேண்டும்.)

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**7.** பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் **இரண்டைத்** தெரிவுசெய்து, திருவிவிலிய கற்பித்தல்களை அடிப்படையாகக் கொண்டு சிறுகுறிப்பு எழுதுக.

(i) குணப்படுத்துதல்

(ii) இயேசுவின் நாசரேத்து பிரசங்கத்தில் வெளிப்படும் போதனைகள்

(iii) நிக்கதேமுவும் இயேசுவானவரும்

(iv) கூட்டுத் தலைமைத்துவம்

**நோக்கம் :**

இறையரசின் அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் இறை வல்லமையைக் காண்பர்.

i. **குணப்படுத்தல்**

இயேசு குணப்படுத்திய சம்பவங்களை உதாரணத்துடன் எழுதியிருக்க வேண்டும். இயேசு நோயாளரை சுகப்படுத்தியதன் காரணம் அவர்கள் மீது கொண்ட அன்பு, இரக்கமாகும். இது இறையரசின் அடையாளங்களில் ஒன்றாகும். இன்றும் நோயில் இருப்போருக்காக ஜெபிக்க வேண்டும். அவர்களை சென்று பார்த்து தேவையான உதவிகளை செய்தல். இயேசுவைத் தேடி வந்த நோயாளர்களையும் இயேசுவிடம் கொண்டு வந்த நோயாளர்களையும் இயேசு கண்ட நோயாளர்களையும் சுகப்படுத்தினார்.

**நோக்கம் :**

இயேசுவின் பணியின் நோக்கத்தை வாழ்வுக்கு முன்மாதிரியாகக் கொள்வர்.

ii. **இயேசுவின் நாசரேந்து பிரசங்கத்தில் வெளிப்படும் போதனைகள்**

ஏழைகளுக்கு நற்செய்தி கூறுதல். அக்காலத்தில் ஏழைகளாக இருந்த மக்கள் இயேசுவை நாடி வந்து அவரின் போதனையைக் கேட்டார். இது போல நாமும் ஏழைகளுக்கு நற்செய்தி கூற வேண்டும்.

சிறைப்பட்டோருக்கு விடுதலை. போதைவஸ்து, குடிப்பழக்கத்துக்கு அடிமையானவர்களை அதில் இருந்து மீட்க வழி செய்தல். (வேறு அடிமைத்தனமும் குறிப்பிடலாம்)

பார்வையற்றோர் பார்வை பெறுதல். கடவுளை அறியாதவர்களுக்கும் உலக காரியங்களில் ஈடுபட்டவர்களையும் கடவுளை அறியச் செய்தல்.

ஒடுக்கப்பட்டவர்கள். சமூகத்தால் பல்வேறு வகையில் ஒதுக்கப்பட்டவர்களை ஏற்றுக் கொள்ளுதல்.

**நோக்கம் :**

கிறிஸ்துவின் அன்பின் ஒளியினால் வாழ்வைப் பிரகாசிக்கச் செய்வர்.

iii. **நிக்கதேமுவும் இயேசுவும்**

இவர் யூதத் தலைவர்களில் ஒருவர். பரிசேயனான இவர் இரவில் இயேசுவை சந்திக்கச் சென்றார். ஆன்மீக வினாக்களுக்கு இயேசுவிடம் விடைகளைக் கண்டுபிடிக்க ஆவலாய் இருந்தார். இவருக்கு மறுபிறப்பு பற்றிய சந்தேகம் எழுந்தது. இயேசு மறுபிறப்பு பற்றி விளக்கமளித்தார். உலகில் பிறக்கும் மனிதன் பாவத்துக்கு அடிமையாகி இறையுறவிலிருந்து விலகி வாழ்கின்றான். ஆனால் மெய்யான வாழ்வை புதுப்பித்து இயேசுவை நேசித்து அவருடன் வாழும்போது திரும்பவும் இறையாட்சியின் உரிமையைப் பெறுகின்றான்.

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**நோக்கம் :**

கூட்டுத் தலைமைத்துவத்தை நாடுவர்.

iv. **கூட்டுத் தலைமைத்துவம்**

இயேசு தம் சீடர்களோடு சேர்ந்து செயற்பட்டார்.

பவுல் தனது மறைத்தூதுப் பயளணங்களின் போதும் அனைவரோடும் ஒன்றிணைந்து செயற்பட்டார். எருசலேம் சங்க தீர்மானங்களும் கூட்டுத்தலைமைத்துவ அடிப்படையில் எடுக்கப்பட்டது.

கிறிஸ்தவர்களாகிய நாமும் தலைமைத்துவம் வகிக்கும் போது பிறரோடு ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

பணியாளர் சாயலாக பணிவிடை செய்ய வழிகாட்டல். இதன் மூலமாக தன்னலமற்று செயற்படுதல், அன்பு, கருணை, இரக்கம் கூட்டுத் தலைமைத்துவத்தின் விசேடப் பண்பாகும்.

(5 + 5 = 10 புள்ளிகள்)

✵ ✵ ✵



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/